## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS.211/2024 | கிராமம் | : | கூவத்தூர் |
| சாட்சி | : | வா.சா–1 | வட்டம் | : | ஆண்டிமடம் |
| பெயர் | : | அந்தோணிஜோசப் | வயது | : | 31 |
| த/பெ | : | ஆபிரகாம் | தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை |

2026–ம் ஆண்டு ஜுலை 20–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதியின் தம்பி மற்றும் அதிகார முகவர் ஆவேன். வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. 29.07.2024 தேதியிட்ட வாதி எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1.

2. 28.11.1985 தேதியிட்ட வாதி மற்றும் எனது தந்தையான அபிரகாம் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2.

3. 12.05.2022 தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள தாவா சொத்துக்கான கணிணி பட்டா வா.சா.ஆ.3.

4. 14.09.2022 தேதியிட்ட எனது தந்தை வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4.

5. 06.01.2024 தேதியிட்ட தாவா சொத்துக்கு வாதி பெயரில் உள்ள கணிணி பட்டா வா.சா.ஆ.5.

6. 06.01.2024 தேதியிட்ட வாதி ஆண்டிமடம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.6.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.